<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை</u>
<u>அசல் வழக்கு எண்.754/2019</u>

2021–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 12–ம் நாள் வெள்ளிக்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய PW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) செல்வி. தேன்மொழி, உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :பழனிமுத்து | தொழில் | : |
| தகப்பனார்/ கணவர் பெயர் | :வெங்கடாசஜலம் | வட்டம் | :வேப்பந்தட்டை |
| கிராமம் | :நமையூர் | சமயம் | : |
| சாதி | : | வயது | :58/2021 |

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

எனக்கு எழுதத் தெரியும். படிப்பதற்கு அறைகுறையாக தெரியும். இந்த வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்று தெரியுமா என்றால் பிரதிவாதிகள் நிலத்தை எழுதிக்கொடுத்து விட்டு என்னை மறிப்பதாக தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்தின் நான்கெல்லைகள் எனக்கு தெரியும். சர்வே எண்.78/2 ஏ–ன் நான்கெல்லை சொல்லமுடியுமா என்றால் கிழக்கு மாசிலாமணி டீச்சர் நிலம், தெற்குப்பக்கம் ரோடு, மேற்குப்பக்கம் தங்கவேல், வடக்குப்புறம் எனக்கு பாத்தியப்பட்டிருந்து சந்தானபாரதியிடம் விற்று விட்ட நிலம். மேற்படி நான்கெல்லை விவரத்தை வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. சர்வே எண்.78/2 ஏ–க்கு எனது பெயரில் பட்டா வாங்கியுள்ளேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதியிடம் இருந்து கிரையம் பெற்ற வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்து விவரத்தில் சர்வே எண்.78/2 ஏ என்பது மட்டும் பேனாவால் அடித்து எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அது குறித்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் அடித்தல் மற்றும் திருத்தம் என்ற விவரம் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 ஆவணமானது சர்வே எண்.78/2 ஏ–க்கு உள்ளது அல்ல என்றால் சரிதான். சர்வே எண்.78/2 ஏ–ல் உள்ள நிலமானது தங்கவேல் மகன் கலியமூர்த்தி என்பவர் பெயரில் உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தற்சமயம் தான் கலியமூரத்தி பெயரில் மாற்றி உள்ளார்கள். சர்வே எண்.78/2 ஏ–க்கு எனது பெயரில் பட்டா மாற்றம் செய்வதற்கு வட்டாட்சியரிடம் மனு கொடுத்துள்ளேன் அது சம்மந்தமான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இந்த வழக்கின் பிரதிவாதிகள் தங்கவேல் என்பவருக்கு எதிராக இதே நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 362/2017 வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பிரதிவாதிகள் சர்வே எண்.78/2 ஏ–ல் உள்ள நிலத்தை எனக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும், நானாகவே வா.சா.ஆ.1 ஆவணத்தில் எழுதிக்கொண்டேன் என்று சொன்னால்

சரியல்ல. அவ்வாறு பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்திருந்தால் நான் சர்வே எண்.78/2 ஏ–க்கு பட்டா வாங்கியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல. சர்வே எண்.78/2 ஏ–ல் உள்ள சொத்தினை பிரதிவாதிகள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தங்கவேல் பெயரில் வழக்கு தாக்கல் செய்துள்ளதை தெரிந்து கொண்டு பொய்யான முறையில் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் எனக்கு தாவாவில் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.